HMOP. 186/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 09.01.2026

எ.ம.சா.1–தாமரை செல்வி த/பெ – முத்துசாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) திருமணத்திற்கு முன்பு மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வருவார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே மனுதாரர் எங்கள் வீட்டிற்கு வருவார் என்றும், அவரை வற்புறுத்தி, பாலியல் தொடர்பு வைத்துக்கொண்டதால் வேறு வழியின்றி என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்த அன்று மனுதாரரின் நண்பர்கள் என்னை பார்க்க வந்த போது நான் வேண்டும் என்றே பார்க்க மறுத்தேன் என்றால் சரியல்ல. நான் அவர்களை பார்க்க மறுத்தது மட்டும் அல்லாமல் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் மனுதாரரை அசிங்கமாக பேசினேன் என்றால் சரியல்ல.

2) TN 67 BP 9349 என்ற இருசக்கர வாகனம் எனது பெயரில் உள்ளது. இந்த வண்டி எனது பெயரில் இருப்பதால் மனுதாரை மேற்படி வண்டியை பயன்படுத்த அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வண்டியை மனுதாரர் எனது பெயருக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல, எங்கள் வீட்டில் மேற்படி வண்டியை வாங்கி எனது கணவருக்கு சீராக கொடுத்தோம். மேற்படி இருசக்கர வாகனத்தை எனது கணவருக்கு சீராக கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15.04.2022 ம் தேதி மேற்படி இருசக்கர வாகனத்தை எனது கணவர் எடுத்து சென்று விபத்து ஏற்பட்டதில் வாகனத்திற்கு சேதமும், எனது கணவருக்கு காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3) மேற்படி விபத்தினால் எனது கணவருக்கு பெரிய காயம் ஏற்பட்டது என்றும், அதை பொருட்படுத்தாமல் வண்டிக்கு சேதம் ஏற்பட்டதால் பொதுமக்கள் முன்னிலையில் எனது கணவரை அசிங்கமாக பேசினேன் என்றால் சரியல்ல. எங்கள் தாம்பத்ய வாழ்க்கை கூட எனது விருப்பத்தின் பேரில் தான் நடக்கும் என்றும், மனுதாரின் விருப்பத்தின் படி நடக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல, கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம்.நாங்கள் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தோம் என்றும், எனது மாமியார் 01.06.2022 ம் தேதி எங்களை பார்க்க வந்த போது அவர் முன்பு வீட்டில் இருந்த டம்பளரை எடுத்து கீழே கொட்டி அசிங்கமாக பேசினேன் என்றால் சரியல்ல.03.08.2023 ம் தேதி எனது மாமியார் எங்களை பார்க்க வந்த போது அவர் முன்னிலையில் கண்ட நாய்களுக்கெல்லாம் சமைத்து போட நான் என்ன வேலைக்காரியா என அவமரியாதையாக பேசினேன் என்றால் சரியல்ல.

4) எனது நிரூபண வாக்குமூலத்தில் திருமணம் முடிந்த நாள் முதல் தற்போது வரை எனது கணவர் மிகபெரிய குடிக்காரர் என்றும், என்னை அடித்து கொடுமைப்படுத்தினார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் என்னை அடித்து கொடுமைப்படுத்தியதாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் என்னை எந்த காலத்திலும் அடித்து கொடுமைப்படுத்தவில்லை என்றும், என்னை நல்லமுறையில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் குடித்து விட்டு வாகனம் ஓட்டியதாக வழக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் குடித்துவிட்டு அக்கம், பக்கம்

வீட்டுகாரர்களிடம் சண்டை போட்டுள்ளார்.

5) எங்கள் பக்கத்துவீட்டை சேர்ந்த ராசம்மாள் என்பவரிடம் எனது கணவர் குடித்துவிட்டு சண்டை போட்டார். மேற்படி ராசம்மாளை விசாரித்தால் அதன் உண்மை தெரியும் என்றால் சரிதான். அவரை என் தரப்பில் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் ஒருநாளும் ஒரு துளி மது கூட அருந்தியது கிடையாது என்றால் சரியல்ல. ராசம்மாள் என்பவருடன் சண்டை போட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் நான் தற்கொலை முயற்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் திருமணத்திற்கு பின்னர் 3 முறை தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரிதான். நான் வரம்பு மீறி மனுதாரரை கொடுமைப்படுத்தியதால் வாழவே வழியில்லாமல் அவ்வாறு தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரியல்ல.

6) 15.08.2023ம் தேதி போன் மூலமாக மனுதாரரை திட்டிய காரணத்தினால் கரூரில் வைத்து எலி மருந்து சாப்பிட்டு தற்கொலை முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. அப்போது மனுதாரை நான் மருத்துவமனை சென்று பார்க்கவில்லை என்றால் எனக்கு தகவல் சொல்லாததால் பார்க்கவில்லை. மனுதாரர் தற்கொலை முயற்சிக்கு நான் தான் காரணம் என்பதால் அங்கு சென்றால் பிரச்சனை ஏற்படும் என்பதால் மனுதாரரை பார்க்க செல்லவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் குடித்து குடித்து மன சிதைவு ஏற்பட்டது என்றும், அது சம்மந்தமாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் எந்த மருத்துவமனையில் என்ன சிகிச்சை பெற்றார் என சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரர் மருத்துவ சிகிச்சை

பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

7) மனுதாரர் மருத்துவ சிகிச்சை எடுக்கவில்லை என்பதால் தான் அது குறித்த ஆவணம் மற்றும் மருத்துவமனை விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. 23.08.2023ம் தேதி நள்ளிரவில் மனுதாரர் அரளிக்காய் அரைத்து சாப்பிட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பகலில் மட்டும் அல்லாமல் இரவிலும் மனுதாரை கொடுமைப்படுத்தியதால் நள்ளிரவு என்றும் பாராமல் அரளிக்காய் அரைத்து சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றார் என்றால் சரியல்ல. 07.09.2023ம் தேதி எனது குழந்தைக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு, சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரிதான். அங்கு எங்களை பார்க்க வந்த மனுதாரிடம் நோட்டை வாங்கிவிட்டு, பொது இடம் என்றும் பாராமல் அவரை அசிங்கமாக திட்டினேன் என்றால் சரியல்ல. கடந்த 20 நாட்களுக்கு முன்பு மனுதாரின் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

8) மனுதாரின் மீது உள்ள கோபத்தினால் மனுதாரரின் தாயார் இறப்பிற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சென்றேன். நான் மனுதாருடன் சேர்ந்து வாழ வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் சேர்ந்து வாழ்வதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்றும், மனுதாரர் அதற்கு உடன்படவில்லை என குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மனுதாரரை முற்றிலும் பிடிக்காத காரணத்தால் தான் மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9) நான் மனுதாரரிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் ஆரம்பம் முதல் என்னை கொடுமைப்படுத்தியதால் அவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றால் சரியல்ல, சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். நானும், மனுதாரரும் பிரிந்து 3 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். மனுதாரரை நான் வெறும் இன்சியல்–க்காக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சேர்ந்து வாழ்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் இனி மேலும் தற்கொலை முயற்சி செய்ய கூடாது என்பதற்காக தான் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் இனிமேலும் என்னுடன் சேர்ந்து வாழ்ந்தால் அவருக்கு தற்கொலை செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை என்றால் சரியல்ல. எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் செலவுத்தொகையுடன் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.